
உ

சிவமயம்



# வண்ணைச் சிலேடை வெண்பா

ஆக்கம் ;

சுன்னாகம்

குரு. சி, மாணிக்கத்தியாகராஜ பண்டிதர்

65

மங்கையர்க்கரசி வித்தியாலய
முகவரகம்
மயிலணி
சுன்னாகம்

2nd. Mar. 1989.

110

உ

சிவமயம்

# வண்ணைச் சிலேடை வெண்பா


சுன்னாகம்

குரு. சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் அவர்கள்

இயற்றியது



பண்டிதர் அவர்களின் புத்திரன்

ஆசிரியர், செஞ்சொற் புலவர்

பண்டிதர் மா. குமாரசுவாமி அவர்களால்

பண்டிதரின் 112-ம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது.

பங்குனிப் பூரம் 1989. விலை: 20 ரூபா



சுன்னுகம்

குரு. சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர்

தோற்றம் ; 1877 மறைவு : 1945

உ

சுன்னுகம்

## குரு. சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர்

அவர்களின்

## வாழ்க்கையில் நிகழ்ந்த

# சில நினைவுகள்

குரு. சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் அவர்கள் 1877ம் ஆண்டு பங்குனித் திங்களில் பூரநட்சத்திரம் கூடிய சுபவேளையில் வண்ணுர்பண்ணையில் வாழ்ந்து வந்த சின்னப்பு அவர்களுக்கும் மனையார் வள்ளியம்மை அவர்களுக்கும் அருமை மகனுகப் பிறந்தார். தாயின் அன்பு மகனுக வளர்ந்த பண்டிதர் ஆரம்பக்கல்வியை தமது தாய்மாமனுரிடம் கற்றபின் சுன்னுகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவரிடம் முறையாக இலக்கண இலக்கியநூல்களையும் சமய சாஸ்திர புராண காவியங்களையும் கற்றுத் தேர்ந்து தெளிவு பெற்ருர் அத்தோடு யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணையில் அயலில் இருந்த சங்கீத மேதை புத்துவாட்டியார் குடும்பத்தோடு தொடர்பு கொண்டு சங்கீதத்தையும் படித்துக் கொண்டார். சமஸ்கிருதம் படித்து வேதாகம விதிமுறைகளையும் குரு மூலம் தெளிவு பெற்ருர்.

இனிய குரல் வளம்மிக்க பண்டிதர் அவர்கள் பாடல்களை-இசையோடு சொற்பொருள் புரிய அட்சர சுத்தத்தோடு பாடும் ஆற்றலையைப் பெற்றதினுலும், சமயசாத்திரங்களின் மெய்ப்பொருளை புராண இதிகாசக் கதைகள் மூலம் விளங்க வைக்க வேண்டுமென்ற ஆர்வமிகுதியாலும்- புராணக்கதைகளை சங்கீத கதாப்பிரசங்கமாக செய்யத் தொடங்கினுர். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் கோவில்கள் சபைகள் எங்கும் பிரசங்கம் நடைபெற்றது. இலக்கிய உபந்நியாசங்களும் நடைபெற்றன.

பண்டிதர் அவர்கள் புலவரிடம் கற்றுத் தேர்ந்த கையோடு இந்தியா பார்க்க ஆசை கொண்டார். கையிற் பணமில்லை. வறுமை நிலை ஆயினும், தன் மூத்தசகோதரியிடம் சிறிய தொகையைப் பெற்று- தாய், தந்தை, சகோதரியே அறியாத வகையில் காங்

கேசன்துறை சென்று தோணிமூலம் தென் இந்தியக் கரையிலுள்ள மண்டபம் போய்ச் சேர்ந்தார். மண்டபத்தில் இரேகுத்துரையாக அப்போது இருந்தவர் சின்னத்தம்பியா பிள்ளை. இவர் பண்டிதர் வீட்டின் அயலாளர். முன்னமே- இவரையும் தாய் தந்தையரை யும் நன்கு அறிந்து பழகியவர். எனவே பண்டிதரைக் கண்டதும் அழைத்து விசாரித்து யாவும் தெரிந்தபின், தாய் தந்தையர்க்கு தந்தி கொடுத்துவிட்டு தன்னோடு வைத்துக் கொண்டார். பண்டி தரின் தமிழறிவையும் தெரிந்து கொண்டார்.

சின்னத்தம்பியாபிள்ளைக்கு இராமநாதபுரம் சேதுபதி மகா ராசாவிடமிருந்து ஒரு அழைப்பிதழ், நடன அரங்கேற்றுவிழா அழைப்பிதழ், அடுத்தநாள் சென்றுவர வேண்டும். இளம்பராய முடைய பண்டிதரை அப்போது எல்லோரும் 'மாணிக்கம்' என்றே பெயர் சொல்லி அழைப்பார்கள். சின்னத்தம்பியாபிள்ளை யும் 'மாணிக்கம் நான் நாளை விழாவிற்கு இராமநாதபுரம் போக வேண்டும் நீயும் வருகிறாயா? அரசர் தமிழ்ப்பித்தர் ஏதும் கேட் டால் சொல்வதற்கு ஆயத்தமென்றால் என்னுடன் வா' என்றார். 'சரி' என மாணிக்கமும் ஏற்றுக் கொண்டார் மறுநாள் விழா விற்கு போனார்கள். மகாராசா கையசைத்து தமது இருக்கைக்கு பின் இருக்க வைத்தார். அப்பொழுது சின்னத்தம்பியாபிள்ளை யிடம், கூட வந்தபிள்ளை யார்? என்பதையும் தமிழ் வரும் என் பதையும் தெரிந்து கொண்டார். அரசருக்கு முன்னே உள்ள மண்டபத்தில் மணல் பரப்பி கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் திருப்புன்கூரில் இருந்து வந்த 11 வயது நடனப்பெண் ணின் நடனம் முதல் முதலாக இங்குதான் அரங்கேற்றம் நடக் கின்றது, நடனம் நடைபெறும் போதே அரசர் திரும்பி ''நட னப் பெண், நாய்'' சிலேடையாக ஒரு வெண்பா'' எனச் சொன் னார். முருகனைத்தியானித்தபடி - பாட்டை - ஆக்கிவிட்டார். சில நிமிடங்கள் ஆகவில்லை - திரும்பினார் அரசர் - பண்டிதர் பாட்டை சொல்லி விட்டார்; - அரசர்க்கு மட்டற்ற மகிழ்ச்சி. அரங்கேற்றம் முடிந்தது. நாலுபக்க மூலையிலும் பிடித்து - கம்பளம் மேலே தூக்கப்பட்டது. கீழே - மணலில் ஒரு சிங்கம் படுத்திருப்பதுபோல் ஒவியம் - நடனப்பெண் ஆடிய ஆட்டத்தில் காலால் வரையப்பட் டிருந்தது. இதனைச் 'சிம்ம நடனம்' என்பார்கள், அந்தப் பெண் ணுக்கு சுவர்ணாபிடேகம் செய்து அனுப்பினார் அரசர். அதன்பின் பண்டிதரை பலவிதமாக பரீட்சித்து அவரின் கல்வித்திறனைத் தெரிந்தபின் - பட்டுப்பீதாம்பரம் போர்த்திப் பரிசில் அளித்து பண்டிதர் பட்டமும் சூட்டிக் கௌரவித்தார். இந்தியாவுக்கு பண்

டிதர் வந்த நோக்கம் தெரிந்த அரசர் - இந்திய நாட்டை சுற்றிப் பார்த்து வர ஒரு பணியாளரையும் செலவையும் கொடுத்து ஆவனசெய்தார்கள் — 6 மாத காலம் எல்லாத் தல தரிசனமும் செய்து முடித்து மன நிறைவோடு ஊர்திரும்பினார்கள் - அன்று தொடக்கம் பண்டிதர் பட்டப் பெயரோடு சேர்ந்துவிட்டது.

இதன் பின் இந்தியாவுக்கு அடிக்கடி போய்வருவார்கள். பிறந்தவூராகிய யாழ்ப்பாணத்திலும் பார்க்க தென்னிந்திய நாடே கௌரவித்துப்போற்றி வந்தது. பின் இந்தியா, சென்றபோது கும்ப கோணத்தில் உள்ள வீரசைவ பீடாதிபதிகளிடம் குருஅபிடேகம் பெற்று இலிங்கதாரணமும் செய்து கொண்டார்கள். இதன் பின் - மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் - குரு சி. மாணிக்கத்தியாக ராஜ பண்டிதர் ஆனார்கள். கோவில்களில்- மடங்களில் - புராணம் வாசித்து - பயன் சொல்வது - பிரபல்யம் பெற்றிருந்தகாலம். பயன் கேட்பதற்காக - மக்கள் கூட்டம் திரளும். போட்டியாக வாசிப்பதும் - பயன்சொல்வதும் நடைபெறும் - தூர இடங்களி லிருந்தும் வண்டிகட்டி வருவார்கள் - பண்டிதர் பயன்சொல்வதில் மிகத்திறமை படைத்தவர் - நயம்படவுரை சொல்வதோடு தமக்கு முன்னே சொல்லுபவர் தவறவிட்ட நயத்தகு பொருளையும் தாமெடுத்து உரைப்பார்.

பெரியபுராணப்படிப்பு - ஒருபெரியார் தில்லைவாழந்தணர் என்ற பாடலுக்கு உரை சொல்கிறார் - அப்பாடலில்வரும் - 'இல்லையேயென்னாத இயற்பகை' எதைக்கேட்டாலும் இல்லை யென்று சொல்லாது கொடுக்கின்ற இயற்பகை என்று சாதாரண பொருளை சொல்லி முடித்தார். அடுத்த பாடலுக்கு உரை சொல்ல வந்த பண்டிதர் முதற்பாடலையுந் தொட்டு தில்லைவாழந்தணர் என்று இறைவன் அடியெடுத்துக்கொடுக்க தில்லைக்கூத்தனைப் பார்த்தபடிபாடும் சுந்தரர் அடுத்து திருநீலகண்டத்து குயவனார் என்று - சாதி சொல்லிப்பாடவே இறைவன் ஒரு பார்வை பார்த் தார் - சுந்தரர்க்கு அப்பார்வையில் சாதி பேசாதே என்பது புரிந் தது - உடனே அடுத்த வரியில் 'இல்லையே, என் - நாத', என் நாதனே - தெரியாமற் சாதி பேசி விட்டேன்' இனி இப்படி சாதி பேசி பாடமாட்டேன் என்பதைக் காட்ட 'இல்லையே என் நாத' என்று அமைந்துள்ள நயம் போற்றப்பட வேண்டியதென சொன்னபோது பயன் கேட்டோர் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத் தது. அத்தோடு சுந்தரர், பின்னே வந்த நாயனாரெவரையுஞ்

சாதிசொல்லிப்பாடவில்லை என்பதையும் காட்டி அச்சொல்லின் சிறப்பை, பொருளை, மேலும் இறுகவைத்தார் என்று புராணம் கேட்ட பெரியோர்கள் இன்றும் சொல்லக் கேட்கலாம்.

பண்டிதர் அவர்கள் கொழும்புக்கு அடிக்கடி சென்று பிரசங்கம் செய்து வருவார் - பண்டிதரின் - தமிழறிவை, பேச்சாற்றலை - கேட்டுத்தெரிந்த சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம் - அவர்கள் பண்டிதரை அழைத்து அன்புடைய நண்பராக்கிக் கொண்டார்கள், அது காரணமாக சேர் பொன் அருணாசலம் - கொழும்பு முகத்துவாரத்தில் பெரிய ஆனைக்குட்டி சமாதி பெற்ற இடத்திலமைந்த கோவில் கும்பாபிடேகத்தை - பண்டிதர் அவர்களைக் கொண்டே செய்து முடித்தார்கள்.

சேர்பொன் இராமநாதன் அவர்களோடு ஏற்பட்ட நட்புறவு காரணமாக - அவர்கட்டிய இராமநாதன் கல்லூரி - பரமேஸ்வராக் கல்லூரிகளில் காலையில் தினந்தோறும் சைவநற்சிந்தனைப் பேச்சுக்கள் நடைபெற்றன. சேர். பொன். இராமநாதனவர்களே தமது வாகனத்தில் வந்து பண்டிதரை கூட்டிச் செல்வார்கள். பிரசங்கம் முடிந்ததும் வீட்டுக்கு கூட்டிவந்து விட்டுச்செல்வார்கள். இப்படி சிலவருடங்கள் நடந்தன - பண்டிதர் - வெளிநாடுகளுக்கு போய் பிரசங்கம் செய்யும் வாய்ப்பை மேற்கொள்ளும் எண்ணத்தைசொல்லி விலகிக்கொண்டார் - சேர். பொன் இராமநாதன் அவர்கள், பிரசங்க ஆற்றல் மிக்கவர். தமது பிரசங்கம் நடக்கும் சபைக்கு பண்டிதரையும் அழைப்பார். இராமநாதன் பாடசாலையில் அறிஞர்கள் கூடிய மகாசபையில் - இராமநாதன் அவர்களின் பேச்சு: சபையின் முன்வரிசையில் பண்டிதருமிருக்கின்றார். பேச்சின் இடையில் - தாயுமானவர் பாடலில் வரும் ''இனியேதெமக்குனருள் ... என்ற பாட்டை தொடக்கிவிட்டு - அப்பாடலை' பண்டிதரைப்பார்த்து பாடுங்கள் என்றார். பண்டிதரும் பாடுகின்றார். அடுத்தவரியின் வரும் - 'ஆடித்திரிந்து என்ற வரியை தொடங்கியபோது இராமநாதன் அவர்கள். பண்டிதரை இடைமறித்து இல்லை - 'ஆடித்திரிந்து' என்று நீங்கள் பாடுவது பிழை - வாடித்திரிந்தது என்றுபாடுங்கள் என சொன்னார்கள் - அதைக்கேட்ட பண்டிதர் இராமநாதனைப் பார்த்து 'இல்லை - ஆடித்திரிந்து என்பதுதான் சரி - அதற்குரிய இலக்கண விதியையும் கூறியதோடு. நாவலர் - சுத்தப்பதிப்பிலும் ஆடித்திரிந்தென்றே இருக்கிறது என்றாராம், உடனே இராமநாதன் சபை

யோரைப்பார்த்து - சபையோரே! சிறிது நேரம் அமைதியாயிருங்கள் - ''நான் வாடித்திரிந்து என்கின்றேன் - பண்டிதர் ஆடித்திரிந்து என்கின்றார். இதன் உண்மை தெரிந்தபின் பேச்சுத் தொடரும் எனச் சொல்லிவிட்டு - தமது நூலகத்திலிருந்து தாயுமானவர் பாடல்-நாவலர் பதிப்பு நூலை எடுப்பித்துப்பார்த்தார் - அதில் பண்டிதர் சொன்னபடியே ஆடித்திரிந்து என்பதாக இருக்கக்கண்டார். பண்டிதரை - சபையைப் பார்த்து - ''நான்சொன்னது பிழை -பண்டிதர் சொன்னதேசரி - பிழை சொல்லித்தடை செய்ததற்கு பண்டிதரிடத்தில் மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறேன் இனி பண்டிதர் பாடுங்கள் என்றாராம் - பண்டிதர் பாடினார் - கூட்டம் முடிந்தபின் பண்டிதர் - தம் நண்பர்களோடு உரையாடுகையில் - நான்படித்த புத்தகங்களெல்லாம் - நாவலர்பதிப்பு-சுத்தப்பிரதி - எழுத்தெண்ணிப்படித்தேன் எனவே - நான்படித்ததை - இப்படியான அறிஞர் சபையில் நிலை நாட்டாமல் எங்கே நிலைநாட்டுவது. என்று கூறினாராம். பண்டிதரின் - கல்வி குருநிலை அறிய தெரிந்திருந்த இராமநாதனவர்கள். தமது சமாதிக்கிரியைகளை பண்டிதரே செய்யவேண்டுமெனச் சொல்லிவைத்ததுடன் மரணசாதன உயிலிலும் சேர்த்திருந்தார். அதன்படியே கொழும்பில் அடங்கிய அவரின் உடல் இங்கு கொண்டுவரப்பட்டு இராமநாதன் கல்லூரி முன்றலில் அடக்கம் செய்யப்பட்டது, அதன் கிரிகைகளை செய்து முடித்தவர் பண்டிதர் அவர்களே,

முருகப்பெருமானிடம் அளவிலாப் பக்திகொண்டவர். கதிர்காமப் பெருமானைத்தரிசிக்கப் பேராசைகொண்ட பண்டிதர் 1902ம் ஆண்டு முதன் முதலாகக் கதிர்காமம் செல்லத்துணிந்தார். அப்போது- கதிர்காமம் செல்பவர்கள் அரசாங்க அதிபரிடம் அனுமதிபெறவேண்டும் பலநாட் பயணம் - புகையிரத வசதியில்லை - வண்டிற் பிரயாணம் - சில இடம் நடை. செல்வோர் மிகக்குறைவே, பண்டிதரும் அவர் பெருமகன் பொன்னையாவும் சேர்ந்து பயணம் மேற்கொண்டு சென்று மாணிக்ககங்கை நீராடி பெருமான் சந்நிதானத்தை யடைந்தார்கள் - தன் வசமிழந்த பண்டிதர் அவர்கள் - உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் பெருகப் பாடத் தொடங்குகிறார் ' காருற்றகதிர்காம மலைமீது விளையாடு கருணையானந்த குருவே, காரணமதான பரிபூரணகிர்பாகரா கடல் வண்ணனுக்கு மருகா! கமலத்தில் வந்த அயனைச் சிறைவைத்தவா - கங்காதரன் செவியில் ஓங்கார பிரணவம் கற்பித்த சுவாமிநாதா! கனபழநியங்கிரியனே'' என்று வரும் ஆசிரிய விருத்தப்பாவில் தன்னிலைப்பாட்டை உணர்த்தி உணர்வு தெளிந்தார்

இப்பாடலை கூடச்சென்ற பெருமகன் பொன்னையா குறித்துக் கொண்டார். கதிர்காமத்தில் முருகன் புகழ்பாடுமடியார்கள் தங்கி பஜனை செய்வதற்காக ஒருமடாலயம் கட்ட நினைந்து பல அல்லற் பாடுகளுக்கிடையே கட்டி முடித்து ஆடிவிழாக்காலத்தில் அடி யார்களைச் சேர்த்து பக்கவாத்திய சகிதமாகப் பஜனை - பிரசங்கம் செய்து வந்தார். இம்மடத்தில் 1927-ல் திருமுருக கிருபானந்த வாரியாரும் அவரின் தந்தையாரும் வந்துதங்கி - அருணகிரியார் சரித்திரத்தை - தந்தையும் மகனுமாகச் செய்தார்கள். மடத் தில் பஜனை முடிவில் கற்கண்டுப் பிரசாதம் கொடுக்கப்படும். இதனல் இம்மடத் தலைவரான பண்டிதரை கற்கண்டுச்சாமியென் றும், மடம் கற்கண்டுச்சாமிமடம் என்றும் பெயர் வழங்கப்பட் டது. இப்போது அரசாங்கத்தின் வேண்டாச் செயல்களால் இம் மடமும் மற்றும் பல மடங்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன.

இடமறிந்து காலமறிந்து சபைதெரிந்து பேசுபவர் பண்டிதர் என சொல்லி நயக்கும் இரசிகமணி செந்திநாதன் "உதாரணமாக ஒன்று சொல்கிறேன். ஒரு முறை இங்கு பண்டிதர் பிரசங்கத் திற்கு வந்திருந்தார். நேரம் சிறிது போய்விட்டது. ஆனாலும் பண்டிதர் எழுந்து பேசத்தொடங்கும் போதே "மாசமோ - சித்திரை - நேரமோ பத்தரை - நீங்களோ நித்திரை" என்ற வுடன் மக்கள் விழித்துக்கொண்டார்கள். சபை கலகலத்தது. இப்படி அழகாக மக்களை தட்டியெழுப்பிப் பேச்சைக்கேட்கவைக் கும் ஆற்றல் மிக்கவராக இருந்தார்" என்றார்.

ஒருமுறை - தருமபுர ஆதீனம் பேரறிஞர்களை அழைத்து - எல்லா வசதிகளையும் செய்துதந்து, தங்கவைத்து சமய இலக்கிய விழாவை சிலதினங்களாக நடாத்தியது. சந்நிதானமே தலைமை தாங்கினார்கள் 'கந்தபுராணம்' பற்றிய பேச்சு - தமிழ்கொண் டல் புரிசை முருகேச முதலியார் அவர்கள் - நன்றாகப் பேசக் கூடியவர், பேசினார். பேசும்போது - கந்தசாமியார் வளையற் செட்டியாராக வந்தார் என்று பேசிவிட்டார். அடுத்துப் பேசிய பண்டிதர் - கந்தபுராணத்தில் முருகன் வளையற் செட்டியாராக வந்ததாக ஒரிடத்தும் சொல்லப்படவில்லையே அப்படியிருந்தால், எந்த இடத்தில் எப்போது என்பதை இப்போது சபையில் தெரிய வைக்கும்படி கேட்கிறேன் எனச்சொல்லி அவரை நாணவைத் தார் - பிழையை கூசாது கூறி மற்றவரை திணறவைக்குமள வுக்கு படித்த நூலில் பயிற்சிபெற்றிருந்தார் பண்டிதர்.

பிற்காலத்தில் இவரின் உற்ற நண்பர்களாக இருந்தவர்களில் ஒருவர் - வலிவடக்கு மணியகாரன் திரு. வேலுப்பிள்ளை மற்றவர் - உடுவில் மூத்தப்பு விதானையார் மகன் தம்பிப்பிள்ளை மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலில் ஒருகூட்டம். பாராளுமன்ற வேட்பாளரின் பிரசாரக்கூட்டம், அன்றுதான் கொழும்பிலிருந்து வந்திருந்த பண்டிதரை பேசவைப்பதற்கு திரு. மூ. தம்பிப்பிள்ளை அவசரமாகப்போய் கூட்டிவந்தார். யாரை ஆதரித்துப் பேச வேண்டிய கூட்டமென்பதை சொல்லவில்லை. பண்டிதருக்கு மற்றவரின் கூட்டம் என்பதாக மனதில் பதிந்திருந்தது. ஏனெனில் மற்ற அபேட்சகர்தான் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தார் - எனவே பண்டிதர் மற்றவரையே ஆதரித்து புகழ்ந்து பேசிக்கொண்டு போகவே - திரு. தம்பிப்பிள்ளையார் செய்வதறியாது எழுந்து இரகசியமாக பண்டிதர் காதில் "இது மற்றவரை ஆதரிப்பதற்குரிய கூட்டம், நீங்கள் மாறியன்றோ பேசுகிறீர்கள்" என்று சொல்லிவிட்டார். பண்டிதர் மேலும் சிறிது நூக்கிப் பேசிவிட்டுப் பின்னர் கூறினூர்- இரத்தினக் கற்களுக்குள்ளே சிறந்தது வைரக்கல் - அந்தக்கல் போற்றப்பட வேண்டியது- பேணப்படவேண்டியது, விலைமதிப்பற்றது. ஆனால் அந்த வைரக் கல்லில் சிறிது மறு ஏற்பட்டால் அதனை வீசிவிடுவார்கள். ஏற்க மாட்டார்கள்- அதுபோலவே நான்பேசிய முன்னவரிடம் எல்லாச் சிறப்பிருந்தாலும்- இன்ன குற்றம், மக்களால் ஏற்கமுடியாத குற்றம் - புரிந்துள்ளார். அது பொறுக்கக்கூடியதல்ல. எனவே குற்றமுள்ள வைரக்கல்லை விலக்குவதுபோல குற்றம் புரிந்தவர் என்ன திறமைமிக்கவராயிருந்தாலும் விலக்கப்படவேண்டியவரே எனப்பேசி முடித்தாராம்- பண்டிதரின் சமயோசிதமான பேச்சை தம்பிப்பிள்ளையர் சொல்லிச்சொல்லி மகிழ்வர். கேட்ட மக்களும் திறமையை பேசிமகிழ்வர்.

கொழும்பில் பேரும் புகழும் பெற்று வாழ்ந்த "அஞ்சுகம்" என்ற அம்மையாரின் வேண்டுகோளுக்கமைய "உருத்திர கணிகையர் வரலாறு" என்ற நூலை பக்கத்துணையாயிருந்து எழுதி தொகுத்துக்கொடுத்ததுடன் அந்நூலுக்கு சிறப்புப்பாயிரமும் கொடுத்துள்ளார். இசைக் கலைஞர்களை கௌரவிக்கும் பண்புடையவர். மாவை குழந்தைவேலு என்னும் நாதசுர இசைக் கலைஞருக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டினூர்.

அளவெட்டி முத்துமாரி அம்மன் கோவில் உரிமையாளர்களிலொருவராகிய பண்டிதர் - அக்கோவில் கொடியேற்றவிழாக்களைத் தாமே செய்யும் குருவாக இருந்தார். பண்டிதர் அவர்களிடம் குரு அபிடேகம் பெற்று சிறந்து விளங்கியவர்களில் காலஞ்சென்ற உரும்பிராய் ஞானவைரவர் கோவில் அர்ச்சகர் திரு. பொ. கந்தையாக்குருக்கள் சாந்தையர்மடம் திரு. முத்துச்சாமிக்குருக்கள், திரிகோணமலை கோணேசர் கோவில் அர்ச்சகர் திரு. வைத்தீஸ்வரக்குருக்கள் அளவை வடக்கு திரு. சி. செல்லையாக் குருக்கள் ஆதியோர் குறிப்பிடத்தக்கவர்கள். யாழ்ப்பாணத்தில் நடந்த அந்தணர்கள், அறிஞர்கள் கூடிய பெருஞ் சபையில் ஆரண வாகமநூற்றுணிபு காட்டி- தர்க்கவாதவுரைபேசி - வீரசைவ இலிங்காயதர்களுக்கு ஆசௌசமில்லையென வாதாடி வெற்றிகண்டவர்.

படிக்கும் காலத்தில் எந்நேரமும் கையில் புத்தகம். உணவு உண்ணும்போதும் ஒருகையில் புத்தகம் - நித்திரைப்பொழுதும் கையில் புத்தகம் - காலைக்கடன் கழிக்கச் செல்லும்போதும் கையில் புத்தகம். சென்றவரைக் காணவில்லையே யென்று தாயார் அழைக்க தன் நினைவுவந்துவருவார். இப்படி இரவுபகல் படித்ததால் கண்ணில் பார்வை குறைந்தது. தாயார் புத்தகங்களை மறைத்துவைத்து படிக்கவேண்டாமெனத் தடுத்தார். ஆயினும் பார்வை சரிவர - தாயாரை திருப்திசெய்து படித்தாராம். பாடம் கேட்பதற்கு யாழ்ப்பாணமிருந்து சுன்னாகம் புலவரிடத்திற்கு நடந்தே வீதியோரமாகப் படித்தபடியே செல்வாராம். பிற்பகலும் சாலையோரமாகப் படித்தபடி வீடுதிரும்புவாராம். ஞாபகசக்தி மிகுந்தவராய் இருந்தபடியால் தான்படித்த நூலில். இன்னபக்கம் - இன்ன பாடல் என்றெல்லாம் சொல்லுவார். பண்டிதர் வீட்டுக்கு அடிக்கடிபுலவர் வந்துபோவார். குருவிடத்தில் மிகுந்த பக்திகொண்ட பண்டிதரை புலவர் அழைப்பித்து அவர்மடிமீது தலைவைத்தபடி தேவாரம் பாடச்சொல்லிக் கேட்டு உயிர் நீத்தாரென்று சொல்லுவார்கள்.

பண்டிதரின் தோற்றம் - தலையில் விவேகானந்தர் அணிவதையொத்த குஞ்சம் தொங்கும் தலைப்பாகை முழங்கால் நீளச்சட்டை - வேட்டி காதில் வைரக்கடுக்கன், கையில்காப்புமோதிரங்கள் - கவர்ச்சிக் கண், அழகிய முத்தான வரிசைப்பற்கள் காலில் மிதியடி கையிற் பிரம்பு - மூக்குக்கண்ணாடி நெற்றியிற் குறி சந்தனப்பொட்டு அதற்குள் குங்குமம் இது சாதாரண நிலை

யில், பிரசங்கநிலையில் உடையெல்லாம் பட்டு உடலெல்லாம் வீபூதிக்குறி, பொட்டு, உருத்திராக்கம் கௌரிசங்கம்-

பண்டிதரின் பண்பட்ட சேவையைப்பாராட்டி சுன்னுகப் பட்டின சங்கம் இவர் வசித்த தெருவுக்கு குரு. சி. மாணிக்கத் தியாகராஜபண்டிதர் வீதியெனப்பெயரிட்டு கௌரவித்திருக்கிறது. பண்டிதர் சுன்னுகத்தில் விவாகஞ்செய்து சுன்னுகத்தையே வாழு மிடமாக்கிக்கொண்டார். 1945 ஆவணி பூராட நாளில் அமர ரானுர். இவர்களின் சமாதி அளவை அம்மாள் கோவிலின் பின்புறத்தில் அமைந்திருக்கிறது. இவர்கள் செய்தநூல்- வண்ணைச் சிலேடை வெண்பா. 41 வெண்பாக்களையுடையது. வண்ணை தையல்நாயகி சமேத வைஸ்தீஸ்வர நாதர்மேல் பாடப்பட்டது. கருத்தாளம் மிக்க பாடல்கள் – படித்தின்புறுக.

[ இந்நூல் பண்டிதர் அவர்களின் 112-வது பிறந்த நாள் நினைவாக: மகனும் கந்தர் மாலை வெண்பா ஆசிரியரும் - மாவை யாதீன வித்துவானும் – முன்னுள், சுன்னுகம் மயிலணி சைவமகாவித்தியாலய அதிபருமாகிய பண்டிதர் - மா. குமார சுவாமி அவர்களால் அகில இலங்கை இந்துமகா சபையின் நல்லாசியோடு பிரசுரமாக வெளியிடப்படுகின்றது. ]

உ

சிவமயம்

# நான் கண்ட பண்டிதர்

இளமையில் எம் இதயத்தில் இடம் பெற்ற உருவங்கள் எம்வாழ்க்கை வளத்துக்கும் வழிவகுத்த வகையிலே அவை நீங்கா நினைவுகளாக இன்றும் எம்மை ஊக்குவிக்கின்றன. இத்தகைய உத்தம திருப்பொலியுடையவர்களில் முதன்மையாகக் கண்முன் வருபவர் வள்ளல் பொன் இராமநாதன் அவர்கள். நீற்றொளி நிலவும் நெற்றியிலே திலகம், கண்ணுதற் கடவுளின் நயனக் கவினை நினைவூட்டும் அருளொளிக் கண்கள். அகத்தூய்மைக்குத் தக புறப்புனித உடை. இராமநாத எழில் என்ற தனித்துவம் வாய்ந்த தோற்றம்.

பரமேஸ்வர மகா வித்தியாலயத்தில் மாணுக்கர்கள் காலை யும் மாலையும் பாராயணம் பண்ணுவது "பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி" என்றற்றொடக்கத்த திருவாசகத் தேன்மொழி கள் - கற்பித்துக் கொடுக்கின்றவர் அந்த இராமநாத எழிலிலி ருந்து எழுந்த எழிலுடைய இன்னொரு சிவவேடம் அக்காலத்தில் அந்தப் பண்ணிசைப் பயிற்சியாளரின் பெயரை உச்சரிப்பதிலும் ஒரு உற்சாகம் எழும். குரு சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் என்று சொற்கள் கூட்டும் பொழுதே ஒரு சுவை தோன்றும்.

இவ்விரு சைவ சிகாமணிகளையும் ஒருங்கு காணும் பாக்கி யம் மாணுக்கர்களுக்கு அடிக்கடி எய்தும் அவ்வேளைகளிற் கல் லூரி மாடி மண்டபம் ஒருகொற்றவை போலக் கோலங் கொள்ளும்.

செந்தமிழுக்குரிய தெய்வநெறி, சொற்களை உச்சரிக்கும் பொழுது ஒழுக்கமான தொனியில் அமைத்துக் கனிவுறச் செய் வது, இராமநாத இசை என்று தனித்துவம் ஒன்றை இந்தக் குரு. மாணிக்கத்தியாகராஜ பண்டிதரும் அமைத்துக்கொண்ட தைக்காண முடிந்தது.

பண்டிதர் இவர்களை முன் மல்லாகம் ஆங்கில பாடசாலை யிலே கதை இசையுடன் உரைக்கும் சொற்பெருக்கு நிகழ்சி களிலே யாம் கண்டு மனதிற்கொண்ட வகையிலே, பரமேஸ் வரக் கல்லூரிக் காலத்திலே நன்கு பழகும் வளம் உண்டாயது, ஒரு சிறு பொழுது அவர்களுடன் உரையாடினுற் போதும், பல நாட்பழகிய பயன் அடைந்துவிடலாம்

இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன், ஈழகேசரி வார வெளியீடு - சுன்னை நகரிலே தேசத்தொண்டன் நா. பொன்னையா அவர்கள் தொடங்கிய காலத்திலே - அந்தக் கலையகத்திலே பண் டிதர் அவர்களை நேரிற்கண்டுரையாடும் வாய்ப்புண்டானது எமக் கோர் பாக்கியமெனலாம். அடுக்குமொழியிற் பேசுவதில் உரு சியை பாரதநாட்டிலிருந்து வந்த ஒரு அறிஞர் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிற் சொற்பெருக்கிலே எமக்குண்டுபண்ணி விட்ட னர். திரு. வி கல்யாணசுந்தரமுதலியார் அவர்களுடன் சேர்ந்து வந்த அறிஞர் அவர் பெயர் ஞாபகத்துக்கில்லை. இந்த எழுச்சி யினல் யாருடனும் உரையாடும் பொழுது அடுக்குமொழியிற் பேசு வதைக் கையாண்ட வகையிற் பண்டிதருடன் அவ்வாறு முனைந் தேன். ஆனுற் பண்டிதரோ இந்த விநோதத்திலே கரைகண்ட வாறு பதிலடி கொடுத்த வண்ணமிருந்தனர். இந்தச் சுவையான நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் சுன்னைக் குமார சுவாமிப்புலவர் சிரேட்டபுத்திரன் அம்பலவாணபிள்ளையும் ஈழ கேசரிப் பொன்னையா அவர்களும் இன்னும் சிலரும், கூட்டம் விரிந்துவிட்டது. அன்றுதான் பண்டிதரின் பாண்டியத்தை நன் குணரக்கூடியதாயிருந்தது.

" நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் "

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய சொல்லாடலின் சுவை யைப் பண்டிதருடன் கூடி மகிழ்ந்தமை கல்வி வளர வேதுவானது கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்,

பண்டிதர் அவர்கள் சமயப்பணியும் மொழித்தொண்டும் எண்டிசையும் விளங்க இந்நாட்டின் அறிவுச்சுடராக இலங்கி னதை யாம் நேரில் அறிந்தது எமக்கும் ஒரு அநுபவமாயமைந் தது.

எந்தையார் நமச்சிவாயப்புலவர் ஈழகேசரியில் முற்பக்கத்திலே சிலேடைச் செய்யுட்கள் வெளியிட்டு வந்த காலம் - தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களும் அவ்வாறு ஈழகேசரியை அணிபெறச் செய்தனர். இவ்வகையிலே பண்டிதர் அவர்களும் தொண்டாற்றினர்.

வண்ணைச் சிலேடை வெண்பா என்ற நூலை இயற்றி வைத்திருந்தனர் பண்டிதர் அவர்கள். ஆனால் அச்சேற்றப்படவில்லை எனினும் வாழையடி வாழையாகப் பண்டிதராக விளங்கும் (மா. குமாரசுவாமி) சற்புத்திரன் அரியபாடல்களை எம்மிடம் காண்பித்து அவற்றை நூல்வடிவாக வெளியிட முன்வந்திருப்பதாகச் சொன்னபொழுது மகன் தந்தைக்காற்றும் கடன் நன்று செய்கின்றீர்கள் என்று வாயார வாழ்த்தினோம்.

பண்டிதரிலே எவர்களும் இலேசாகக் காணக்கூடியதாக இருந்தது உருவம் முழுவதும் ஒரு தேசு. இது செம்மையின் சின்னம். அவ்வாறு சின்னஞ்சிறு வயதிலேயே இருந்தபடியால் அன்று சேதுபதி மன்னன் பேரவையில் நின்று அந்த வேந்தன் ஆதரவு பெறக்கூடியதாயிருந்தது. இந்த நிகழ்ச்சியைப் பண்டிதர் எமக்குப் பலமுறை எடுத்துரைத்து உள்ளொளியைப் பற்றி விரிவுபடுத்தியிருக்கின்றனர்.

என்ன புண்ணியம் இவர்கள் செய்திருந்தார்கள் என்பதைத் தென்னிந்தியாவில் இவர்கள் முத்தமிழ் பயின்று வித்தகராக வந்த வரலாற்றை அவர்கள்பாற் கேட்டின்புற்ற எம்போன்றவர்களுக்கே புலப்படும்.

வேதசிவாகம விற்பன்னர் வேதியர் திலகம் காசிவாசி செந்தில் நாதஐயர் - வித்துவசிரோமணி, சி. கணேசையா பண்டிமணி மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணன் (நவநீத கிருஷ்ணபாரதி) பல்கலைப் பண்பின் உருவம் உயர்திரு சுப்பையா நடேசபிள்ளை - சுன்னைகுமாரசுவாமிப்புலவர் மல்லை நமச்சிவாயப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆகியவர்களுடன் கலந்

துரையாடி கலைநயந் தெளிந்தவர் பண்டிதரவர்கள். இவர்கள் இயற்றிய முன்னைநாதர் '' நவதுதிப் பாடல்கள் '' பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் வெளியிட்ட ''ஈழத்துக் கவிதைக் களஞ்சியம் '' என்ற நூலிற் காணப்படுவது பண்டிதர் அவர்களுக்கு ஓர் சான்றிதழ் வழங்கப்பட்டதுபோலத் துலங்குகின்றது.

## வெண்பா

கண்டதன் மேயினிமைக் கண்டம் கனிவுநனி
கொண்டதன் ணுருங் குரல்நயம் - ஒண்டமிழ்ப்
பண்டித மாணிக்கம் பற்றுதியா கர்வேந்து
எண்டிசையும் பெற்ருர் எழில்.

இங்ஙனம்

மல்லை. நம. சிவப்பிரகாசம்
(அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர், சட்டத்தரணி)

மல்லை
1-11-1988

---

சிவமயம்

## வண்ணைச் சிலேடை வெண்பா

மாவை

பிரம்மஸ்ரீ க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்

கூறிய

# சாற்றுகவி

### வெண்பா

ஈரஞ்செ றிந்தநலத் தின்சொற் படையுடையான்
வீரஞ் செறிந்தசைவ வீறுடையான் - சாரஞ்சேர்
அஞ்சக் கரமோதி அக்கமணி தாமுருட்டிக்
கஞ்சக் கரஞ்சிவந்தான் கற்று.

தண்டமிழிற் றேனிசையிற் சைவத்திற் றான்கலந் தாங்
குண்ணற் குறங்கற் குளமறப்போன் - கொண்ட
கருத்திருத்தி வாழ்பவன் கண்ணுதலான் பாதங்
கருத்திருத்தி ஞானத்தாற் கண்டு.

சுன்னைக் குமார சுவாமிக் கமைசீடன்
பன்னும் பலகலைதேர் பண்டிதன் - சின்னப்பா
தந்ததவ மாணிக்கஞ் சைவத் திருமுறைசேர்
செந்தமிழ்ப் பேச்சுக்கோர் சிந்து.

எந்தை கதிர்காமத் தெம்மான் திறல்பாடி
முந்தை வினைதீர்க்கு மூதறிஞன் - சந்தமிகுந்
தேனா ரிசைப்புலவன் தேர்தியாக ராஜனெனு
மானா பரணன் மதித்து.

யாழுந் துறைத்தமிழும் யாணர்த் திருநெறியுஞ்
சூழும்யாழ்ப் பாணத்துத் தொல்வண்ணை - வாழுமரன்
பொன்னா ரடிக்கே புனைந்தான் சிலேடைவெண்பா
நன்னா வலர்நயக்க நன்கு.

உ

சிவமயம்

# சிறப்புப் பாயிரம்

வித்துவ சிரோமணி
பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்
கூறியது

## அகவற்பா

நாவலொடு பெயரிய தண்பொழிற் பரப்பிடை
வடாஅதுந் தெனாஅதுங் குடாஅதுங் குணாஅதும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நால் வரைப்பி னகவயிற் பன்னூ
லாய்ந்துமிகு புலவரு மேய்ந்துநனி வளமிகூஉ
மீழத்துப் புலவரு மாழத்து நோக்கச்
செந்தமிழ் சிவனு முந்துவரைப் பிதுவென
அந்தமி லறிஞர் புந்திகொண் டேத்தும்
யாழ்ப்பாண மென்னு மெழிலார் நாட்டிடை
முழுமதி போன்று முகமதி தோன்று
மாட மோங்கு மறுகுசூழ் வண்ணையிற்
கோவில் கொண்டு மேவிய இறையோன்
எதிர்ந்துவா னிலங்கிய வெயின்மூன்று தீக்கொளத்
திருகிய சினத்தி னொருகணை தொடுத்தோன்
ஊர்வ தேறே உண்பதை யமே
கையது மழுவே மெய்யது நீறே
சடையது பிறையே மிடறது கறையே
உருவினிற் பாதி பெண்ணு குமே
கண்ணு மொருமூன் றாகிக் கவினும்
செயலு மென்றுங் கூத்தே பிறிதிலே
யன்ன கடவு ளடியிணை பணீஇப்
பிறவிப் பிணிக்கு மருந்தா கியரெனச்
சென்னியிற் கொண்டு மன்னுமன் பதனின்

இன்னிசை யொழுகப் பன்னுநற் றமிழிற்
செம்பொரு டேங்கச் சிறந்த வண்ணச்
சிலேடைவெண் பாவெனச் செவ்விதி னொருநால்
யாத்தமைத் தனனு லிவன்யா ரென்னின்
அவனே,
சொல்லும் வண்ணயிற் றோன்றிய தகையினன்
சின்னப்ப நாமன் செய்தவப் புதல்வன்
புலவர் தலைக்கொளு நன்மணி யாய
சுன்னைக் குமார சுவாமிப் புலவனை
நாளும் வழிபடீஇ நற்றமிழ்க் கலைகள்
பலவுங் கற்ற பண்பினின் மிக்கோன்
சிவனடிக் கன்பு செய்துநனி யொழுகுவோன்
வீரசை வத்து விளங்கிய குருமணி
இந்நிலந் தன்னி லிணையின்றி விளங்கும்
இயல்பி னுய சொலற்பெரு வண்மையின்
நவையில் வான்பொரு ளவையோர் கேட்டுச்
சுவைத்துச் சுவைத்து மனமகிழ் தரவே
நகைச்சுவை தோன்ற வகைபெறச் சொல்லும்
வித்தகம் பெற்ற உத்தமக் குரிசில்
ஆண்டுதொ றீண்டிய அன்புடன் செலீஇக்
கதிரை மலையிடைக் கதிரா யிரமெனுந்
தோற்றமொ டரனுர் நுதற்கணிற் றோன்றிச்
சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
ஏந்திய செவ்வே ளெழிலார் சேவடி
பேணி யருள்பெறீஇப் பேணிட வருநர்க்
கவன்றன் பெருமையு மறைந்துவரு செல்வன்
இசைத்தமி ழாய்குபு வினிதுபெறப் பாடும்
வன்மையும் பெறூஉம் வான்புக ழமைந்த
மாணிக்கத் தியாக ராசபண் டிதனே.

உ

சிவமயம்

ஏழாலை

பிரபல வைத்தியரும்

சித்தாந்த வித்தகருமாகிய

திருவாளர் ஐ. பொன்னையா அவர்கள்

கூறிய

# பாயிரம்

பொருதிரைப் பெருங்கடல் புடையுடுத் தான்ற
நலம்பல செறியும் இலங்கைமா நகரின்
வடபாற் பொலிந்து மன்னிய சிறப்பின்
முகிறவழ் சோலையு முளரிநீர்ப் பொய்கையுங்
கன்னலுஞ் செந்நெலுந் துன்னிய கழனியும்
என்றிவை முதலா வியைந்திடு வளமெலாம்
புரைதப வுடைத்தாய்ப் பொச்சாப் பின்றிய
மக்கள் கல்வியுஞ் செல்வமும் வாய்ப்ப
மற்றவை பெற்ற நற்பயன் கொள்ளும்
ஆற்றி னிழுக்கா தறம்புரிந் துறையும்
மாற்றரு மியல்பின் மன்னியாழ்ப் பாண
நாட்டி லுயர்ந்த நாகரி கத்தொடு
பலதொழி லாற்றி வழுவற வாழும்
நற்குலக் குடிகள் நவைதவிர்த் திடும்வெண்
நீற்றின் செல்வமே பேற்றி லுயர்ந்த
பேறெனக் கருதிப் பேணிய தொழிலாய்
நண்ணிய பெருமை வண்ணைமா நகரிற்
கோயில்கொண் டடியார் குறைவறு மன்பில்
உளங்கரைந் துருகி யோலிட் டடிதொழ
மற்றவர்க் கிரங்கி வான்பெரும் போகமும்

வீடுமென் றின்ன வேண்டிய வேண்டியாங்
கருளும் பெருமைக் கறைமிடற் றண்ணல்
மலர்சிலம் படியில் வைத்தபே ரன்பால்
வண்ணச் சிலேடை வெண்பா வென்னும்
எண்ணரும் பெருமை யிலங்கிடு மொருநூல்
சொற்பெரு சிறப்புந் நற்பொரு ளழகும்
பொதுளவும் புலவோர் மதிநுழைத் தரிதின்
உணரவும் வைத்தே யணிபெற யாத்துத்
துன்றுறு மலராய் நன்றுறப் புனைந்தனன்
அவன்யா ரென்னில்
சுன்னைக் குமார சுவாமிப் புலவர்
தன்னிடங் கல்வி தகவுறக் பெற்றோன்
அவையோர் மெச்சச் சுவைபெறப் பேசும்
ஆற்றன் மிக்கவன் சீற்றமில் மனத்தன்
திருத்தொண்டரர்தியர் திப்பிய கதைகளைக்
கருத்துற வவையிற் கழறியே மகிழ்பவன்
எமக்கு மரிய வினிய நண்பன்
வீர சைவ வித்தகக் குரவன்
சின்னப் பாமுற் செய்தநற் றவத்தால்
அவன்வயிற் றுதித்த அருமணி போல்வான்
சிவனடிக் கன்பு செய்திடும் பெரியோன்
பேணிப் பெரியோர் புகழும்
மாணிக்கத் தியாக ராசபண் டிதனே.

---

உ

சிவமயம்

சுன்னாகம்

குரு சி, மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் அவர்கள்

இயற்றியது

# வண்ணைச் சிலேடை

# வெண்பா

## காப்பு

தும்பிமுகன் தம்பியுமை சோமேசன் வாணிகுரு
நம்பியுள முன்னுருகி நாடுவேன் - அம்புவியில்
மன்னி விளங்கவுயர் வண்ணைச் சிலேடை வெண்பா
என்னிதயத் தேயிருத்தி யே.

# பாடல்கள்

1.

தேசுமட வார்பதத்தும் செவ்வீரர் தங்கரத்தும்
மாசிலம்பு சேருமெழில் வண்ணையே - பாசிலங்கு
தங்கமலைக் கையார் தருமன்பி னூர்தமனந்
தங்கமலைக் கையரார் தலம்.

குறிப்பு :-

பதத்து - மா சிலம்பு சேரும் - பாதத்தில் பெருமை பொருந்திய சிலம்பென்னும் ஆபரணஞ் சேரும்

கரத்து - மாசு - இல் அம்புசேரும் - கையில் குற்றமில்லாத பாணங்கள் பொருந்தும்

தங்கமலைக்கையார் - தங்கமலையைக் கையிலுள்ளவர்

மனந்தங்கு - அமலைக்கு - ஐயார் - மனத்திலே தங்குகின்ற உமா - தேவிக்கு நாயகர்.

2.

வண்டூர் மரைக்கயத்தும் வாள்வேந்தர்

போர்க்களத்தும்

மண்டூகஞ் சேருமெழில் வண்ணையே - தொண்டுரு

மஞ்சக் கரத்தா னனுதினமுந் தோத்திரிக்கு

மஞ்சக் கரத்தா னகம்

குறிப்பு :-

கயத்தும் மண்டூகம் சேரும் - குளத்தில் தவளைகள் தங்கும்

போர்க்களத்து மண்டு ஊகம் சேரும் - யுத்தகளத்தில் படை வகுப்புப் பொருந்தும்.

அம் - சக்கரத்தான் - அழகிய சக்கராயுதத்தையுடைய விஷ்ணு.

அஞ்சு - அக்கரத்தான் - அஞ்சு அக்ஷரத்தையுடையவன்.

3.

காசணிமீன் ஞர்முகத்துங் கம்மாளர் தங்கரத்தும்

மாசுந் தரந்தோன்றும் வண்ணையே - நாசஞ்செய்

அக்கரவைப் பூண்டா ரறியாப் பெருமையினர்

அக்கரவைப் பூண்டா ரகம்.

குறிப்பு :-

முகத்தும் மா சுந்தரம் தோன்றும் - முகத்திலே பேரழகு தோன்றும்.

கரத்தும் - மாசு - உந்து - அரம் தோன்றும் கையிலே அழுக்கைப் போக்கும் அரம் விளங்கும்

அக்கு - அரவைப் - பூண்டார் எலும்பையும் பாம்பையும் தரித்தவர்.

4.

விண்டுவுறை பாற்கடலும் வேதனுறை தாமரையும்
வண்டரங்கங் காட்டுமெழில் வண்ணையே -
கொண்டவிடைப்
பாமாலை யானர் பகர்பண் டிதர்பாடும்
பாமாலை யானர் பதி.

குறிப்பு :

விண்டு - உறை - பாற்கடலும்-
விஷ்ணு உறையும் பாற்சமுத்திரமும்
வண் - தரங்கம் - காட்டும்
வளமார்ந்த திரைகளைக் காட்டும் தாமரையும் - வண்டர்-
அங்கம் காட்டும்
தாமரைகள் வண்டுகளின் அங்கத்தை காட்டும்
பா - விடை கொண்ட - மால் - ஐ - ஆனர்
பரந்த விடையாகித் தாங்குதலைக் கொண்ட திருமாலுக்கு
கடவுளானவர்.
பாமாலை - ஆனர்
பாமாலையிலே பொருந்தினவர்.

5.

ஆடுங் கொடித்தெருவு மையனருண் மாதவனும்
மாடங் குலவுமெழில் வண்ணையே - தேடுந்தம்
பாதங்கைக் கொண்டார் பழிநீக்கி யேயரியம்
பாதங்கைக் கொண்டார் பதி.

குறிப்பு :

கொடி - ஆடுந்தெரு - கொடி ஆடும் தெருக்களில் மாடம் - குலவும் - மாடங்கள் விளங்கும் மாதவனும் - மாடு - அங்கு - உலவும் - திருமால் மாடாக அங்கே உலாவும். பாதம் - கைக்கொண்டார் - பாதங்களை தியானிக்கின்றவர்களின் அரி - அம்பாதம் கைக்கொண்டார். திருமாலை அம்பாகத்தமது கையிற் கொண்டவர்,

7.

சூதோரா நாயகர் தூயமணி வாயில்கள்
மாதோ ரணங்கூடு வண்ணையே - தீதார
அஞ்சந் தனத்தா ரணிமதுரை வேட்டணிந்த
அஞ்சந் தனத்தா ரகம்.

குறிப்பு :-

நாயகர் - மாது ஓர் - அணங்கு - ஊடும்
நாயகர் பெண்ணோடு ஓர் அணங்கு பற்றி ஊடுவர்.
வாயில்கள் - மா - தோரணங் கூடும்
வாயில்கள் பெரிய தோரணங் கூடப் பெறும்
அஞ்சு - அம் - தனத்தார்
அஞ்சுகின்ற அழகிய தனத்தையுடைய மாதர்
அம் சந்தனத்தார்
அழகிய சந்தனத்தை யுடையார்

8.

நயக்கப் பெறுபாவும் நண்ணு மடவாரும்
மயக்கவணி கூடுமெழில் வண்ணை - வியக்கவரு
ளாறுதலை வைத்தா ரடைந்தார்க் கமுதுநிக
ராறுதலை வைத்தா ரகம்.

குறிப்பு :-

பாவும் மயக்கவணி கூடும்
பாக்களும் மயக்கவணியென்னும்
ஓரலங்காரத்தைப் பொருந்தும்
மடவாரும் - மயக்க - அணி கூடும் - பெண்களும்
மயக்கத்தக்க அலங்காரத்தைக் கூடுவர்
அடைந்தார்க்கு - ஆறுதலை வைத்தார்
அடைந்தவர்க்கு ஆறுதலை வைத்தார் -
ஆறு - தலை - வைத்தார் ஆற்றைத் தலையில் வைத்தவர்.

8.

ஓதரிய சிந்துரமும் ஒப்பிலரு ளீகையரும்
மாதருநற் கோடுகொளும் வண்ணயே - யாதரத்துக்
கஞ்சுதலை யுற்ரு ரரும்பாவ நீக்குதற்கா
யஞ்சுதலை யுற்ரு ரகம்.

குறிப்பு :-

சிந்துரம் - யானை

மா - தரு நற்கோடு - கொளும்

பெரிய தருவை ( முறித்து ) கோட்டிற் கொள்ளும்

ஈகையர் - கற்பகதருவின் கோட்டை ஒப்பர்

அஞ்சுதலை யுற்ருர் - அச்சப்படுதலை பொருந்தினவர்கள்

அஞ்சு - தலை - உற்ருர்

அஞ்சு தலையை உடையவர்.

9.

தேஞர் பொழிலிடத்துந் தெள்ளறிவி லாரிடத்தும்
மானங் குறையுமெழில் வண்ணேயே - வானங்கொள்
ஆலமருந் தண்ணலரிபுரத்தை வாட்டிவரும்
ஆலமருந் தண்ண லகம்.

குறிப்பு :-

பொழிலிடத்தும் - மான் - அங்கு - உறையும்

சோலைகளிடத்து - குதிரைகள் அங்கே தங்கும்

அறிவிலாரிடத்து மானம் குறையும் -

அறிவிலாதவர்களிடத்துப் பெருந்தன்மை குறையும்

ஆல் - அமரும் - தண் - நல் - ஆலிலையில் இருக்கும்

குளிர்ந்த - நல்ல

அரிபுரத்தை - திருமாவின் மேனியை

ஆலம் - அருந்து - அண்ணல் - நஞ்சை உண்ட கடவுள்.

10.

துய்யபெரி யோர்பதத்துந் தூயமத னார்கரத்தும்
வையம் பணியுமெழில் வண்ணையே - செய்ய பங்க
சங்குவளை கொண்டார் தகுமுகங்கண் ணார்க்கணியச்
சங்குவளை கொண்டார் தலம்.

குறிப்பு :-

பெரியோர் பதத்து வையம் - பணியும்
பெரியோரின் பாதத்தில் பூமியிலுள்ளார் பணிவர்
மதனார் கரத்து - வை - அம்பு அணியும்
மதனுடைய கையில் கூரிய அம்பு பொருந்தும்
பங்கசம் - குவளை - கொண்டார் - முகம் - கண்
தாமரையையும் குவளையையும் முகமுங் கண்ணு
மாகக் கொண்டவர்கள்.
சங்கு வளை கொண்டார் - சங்குவளையலைக் கொண்டவர்.

11.

காப்பணிந்த செய்யுங் கணிகையரை நட்டுவனும்
மாப்பணிலங் காட்டுமெழில் வண்ணையே - காப்பொலியும்
அம்மா வுரிய னழகுபெற வாமத்தெம்
அம்மா வுரியா னகம்.

குறிப்பு :-

செய் - மா - பணிலம் - காட்டும் -
வயல்கள் - பெரிய - சங்குகளைக் காட்டும்
நட்டுவன் - மா - பண்ணில் - அங்கு - ஆட்டும்
நட்டுவன் மேன்மையான பண்ணில்
அங்கே ஆட்டுவான்
அம் - மா - உரியான் - அழகிய
யானைத்தோலை உடையவர்
அம்மா உரியான் - தாயாகிய
உமையை உரியவர்.

12.

தோமிலணி யார்முத்துந் தூய மலர்க்கொத்தும்
மாமுலைமீ தோங்குமெழில் வண்ணையே—கோமனத்துச்
சங்கை யுடையார் தமக்கறிய வொண்ணாத
சங்கை யுடையார் தலம்.

குறிப்பு :-

முத்து - மா - முலைமீது - ஓங்கும்
முத்து மாலை சிறந்த முலைகளின்மீது விளங்கும்
மலர்கொத்தும் - பூங்கொத்தும்
மா - மூலை மீது பெரிய முல்லைச் செடிகளின் மேல்
ஓங்கும் - உயர்ந்திருக்கும்
சங்கை உடையார் - சந்தேகம் உள்ளவர்கள்
சங்கையுடையார் - சிறப்புள்ளவர்கள்

13.

மாதவஞ்செய் மேலோரும் மன்னுமுயர் மான்மார்பும்
மாதுறக்கம் பூணுமெழில் வண்ணையே — சீதரஞ்சூழ்
பாரிலங்கை யுற்ருன் பகர்பா தலஞ்செலுத்திப்
பாரிலங்கை யுற்ருன் பதி.

குறிப்பு

மேலோர் - பெரியோர்
மாதுறக்கம் பூணும் - சிறந்த வானுலகெய்துவர்
மால் - மார்பு — திருமாலின் மார்பு
மாது - உறக்கம் - பூணும் — இலக்குமி துயில் கொள்ளும்
பார் இலங்கை — பாரிலுள்ள இலங்கை
பார் - இலங்கு - ஐ — பரந்து விளங்கும் கடவுள்.

14.

மெச்சுமனை யுள்ளிடத்தும் மேவுபங்க யத்தடத்தும்
மச்சங் குலவுமெழில் வண்ணையே - இச்சைசெறி
அக்கூற்றூர்க் கொன்று ரடிமைமார்க் கண்டனுக்காய்
அக்கூற்றூர்க் கொன்று ரகம்.

குறிப்பு

மனை - உள்ளிடத்து - மச்சு - அங்கு - உலவும்
விடுகளின் உட்பக்கத்தில் மச்சுக்கள் அங்கே விளங்கும்
பங்கயத்தடத்தும் - மச்சம் - குலவும் தாமரைத்
தடாகங்களில் மீன்கள் சஞ்சரிக்கும்

15.

கட்டுரைசொல் தட்டானுங் காரோங்கு காவகமும்
மட்டப் பணிசெய்யும் வண்ணையே - முட்டுபயம்
போகத் திருந்தார் புரமெரித்தார் தேவியொடும்
போகத் திருந்தார் புரம்.

குறிப்பு

தட்டான் - மட்ட - பணி செய்யும்
தட்டான் - மட்டவேலை செய்வான்
காவகம் - மட்டு - அப்பு - அணி செய்யும்
சோலைகள் தேனை நீர் போலச் சொரியும்
பயம்போக - திருந்தார் — அச்சம் நீங்கத் திருந்தாதவர்கள்
போகத்து - இருந்தார் - போகத்திலே இருந்தவர்.

16.

ஓதுகங்கை மாநதியு மொள்ளொளிசேர் சாமரையும்
மாதரங்கங் காட்டுமெழில் வண்ணையே - ஆதரஞ்சேர்
போகமனம் வைத்தார் புலத்தினுரர் போதநெஞ்சம்
போகமனம் வைத்தார் புரி.

குறிப்பு

மா – நதி மா – தரங்கம் காட்டும்
மகிமை யார்ந்த நதிகள் பெரிய திரைகளைக் காட்டும்
சாமரை - மாதர் - அங்கு – அங்கு – ஆட்டும்
சாமரைகளை பெண்கள் இடமிடந்தோறும் ஆட்டுவர்
போக – மனம் வைத்தார்
போகத்திலே மனதை வைத்தவர்கள்
போ - கமனம் – வைத்தார்
போகின்ற வேகத்தை உள்ளவர்கள்

17.

பேணிக்கொ ளாலைகளும் பேசுமன்னர் மாமுடியும்
மாணிக்கங் காட்டுமெழில் வண்ணையே - வாணிக்குத்
துண்டங் கெடுத்தார் துலங்குமொளி யோங்குபிறை
துண்டங் கெடுத்தார் துறை.

குறிப்பு

ஆலைகள் – மாண - இக்கு – அங்கு ஆட்டும்
ஆலைகள் சிறந்த கருப்பை அங்கே ஆட்டும்
முடி - மாணிக்கம் – காட்டும்
முடிகள் மாணிக்கரெத்தினத்தைக் காட்டும்
துண்டம் - கெடுத்தரர்
மூக்கைக் கெடுத்தவர்
பிறைத்துண்டு - அங்கு - எடுத்தார்
பிறைத்துண்டை அங்கே எடுத்தவர்

18.

மின்னனையார் நாட்டியமும் மேதகைய மாமணியும்
மன்னரங்கஞ் சேருமெழில் வண்ணையே - பன்னரிய
மாதங்கங் கொண்டார் மலையரசன் பாலுதித்த
மாதங்கங் கொண்டார் மனை.

குறிப்பு :-

நாட்டியம் - மன் - அரங்கம் - சேரும்
    நடனம் அரசர் சபையைச் சேரும்
மணி - மன்னர் - அங்கஞ் - சேரும்
    இரத்தினங்கள் அரசர்களின் அங்கத்தைச்சேரும்
மாதங்கம் - கொண்டார்
    (மேரு) வில்லைத் தாங்கினவர்
மாது - அங்கம் - கொண்டார்
    பெண்ணைத் திருமேனியில் வைத்தவர்

19.

தண்டலையார் பூந்தாதுந் தக்கசெழிப் பார்நிலமும்
வண்டுவரை காட்டுமெழில் வண்ணையே - பண்டயனாங்
கோலத் தலையார் குறிக்கறியார் செஞ்சடையில்
கோலத் தலையார் குடி.

குறிப்பு:-

தாது - வண்டு - வரை - காட்டும்
    மகரந்தம் வண்டுகளின் இரேகைகளைக் காட்டும்
நிலம் - வண் - துவரை - காட்டும்
    நிலங்கள் வளமார்ந்த துவரைகளைக் காட்டும்
அயன் - அங்கோலத்து - அலையார்
    பிரமாவுக்கும் - பன்றியாகிய
திருமாலுக்கும் அலைவு பெறுதவர்
    கோலத்தலையார் - கங்கையையுடையார்.

20.

ஓதரிய காவகத்து மோங்குபுல வோரகத்தும்
வாதங் குலவுமெழில் வண்ணையே - வேதனரி
பொன்னக ரத்தான் புரிதவத்துக் காரருள்செய்
பொன்னக ரத்தான் புரி.

குறிப்பு :-

காவகத்து - வாதம் - குலவும்
சோலையில் காற்று சஞ்சரிக்கும்
புலவோர் - அங்கத்து - வாது - அங்கு - உலவும்
புலவர்களிடத்து தருக்கம் நிகழும்
பொன்னகரத்தான் - இந்திரன்
பொன் - நகு - அரத்தான்
பொன்போல விளங்கும் அரத்தையுடையரன்

21.

சுந்தரஞ்சேர் வீதிகளுந் தூயபெரு வேள்விகளும்
மந்திரங்க ளோங்குமெழில் வண்ணையே - சந்திரனைத்
தங்கமுடி வைத்தார் தனிமதுரைப் பேரரசாய்த்
தங்கமுடி வைத்தார் தலம்.

குறிப்பு

வீதிகள் - மந்திரங்கள் ஓங்கும்
வீதிகள் வீடுகளால் விளங்கும்
வேள்விகள் - மந்திரங்கள் - ஓங்கும்
யாகங்கள் மந்திரங்களால் உயரும்
தங்க - முடி வைத்தார்
முடியில் தங்கும்படி வைத்தவர்
தங்கமுடி வைத்தார்
தங்கத்தாலாய கிரீடத்தை வைத்தவர்.

22.

கட்டிலங்கு வாவிகளும் காவிலங்கு வண்டுகளும்
மட்டடங் கடக்குமெழில் வண்ணையே - கெட்டவரைக்
கண்டங் கறுத்தார் கதித்துவரு மாலமுண்டு
கண்டங் கறுத்தார் கதி.

குறிப்பு

வாவிகள் - மட்டம் - கடக்கும்

தடாகங்களிலுள்ள நீர் அளவைக் கடக்கும்

வண்டுகள் - மட்டு - அங்கு - அடக்கும்

வண்டுகள் தேனை அங்கே தம்முள் நிறைக்கும்

கண்டு - அங்கு - அறுத்தார்

தெரிந்து அங்கே அறுத்தவர்

கண்டம் - கறுத்தார்

கண்டம் கருமை அடையப் பெற்றவர்.

23.

திடக்குணத்தி னார்மனமுஞ் செல்வத் தெருவும்
மடக்கம் பயிலுமெழில் வண்ணையே - நடக்கமலத்
தாளாரை யாளார் தலைவணங்கிப் போற்றிசெய்து
தாழாரை யாளார் தலம்.

குறிப்பு

மனம் - மடக்கம் - பயிலும்

மனம் அடக்கத்தைப் பொருந்தும்

தெருவும் - மடக்கம் - பயிலும்

தெருக்களும் வளைவுகளோடு விளங்கும்

தாளாரை ஆளார்

திருவடிகளை ஆட்சிப்படுத்தாதவர்

தாழாரை - ஆளார்

தாழாதவர்களை ஆண்டருளாதவர்,

24.

புண்ணியமார் மாமறுகும் போதுணவா ராவணமும்
பண்ணியங்க ளோங்கும் பணிவண்ணே —
விண்ணவர்க்காய்
அங்குசத்தைக் கொண்டா ரரியதந்தை பன்னியர்பால்
அங்குசத்தைக் கொண்டா ரகம்.

குறிப்பு :-

மறு - பண் - இயங்கள் - ஓங்கும்
வீதிகள் பண்ணமைந்த வாத்தியங்களா லோங்கும்
ஆவணம் – பண்ணியங்கள் – ஓங்கும்
கடைகள் பலகாரங்களா லுயரும்
அங்குசத்தைக் – கொண்டார்
தோட்டியைக் கைக்கொண்டவர்.
பன்னியர்பால் – அம் - குசத்தைக் கொண்டார்
இருடி பன்னியர்களின் அழகிய தனத்தைக்கொண்டவர்

25.

எண்ணரிய பாவினத்து மேத்தரிய சித்திரத்தும்
வண்ணம் பயிலுமெழில் வண்ணேயே — கண்ணடங்கா
மின்னு முடித்தலையார் வேத முடித்தலையார்
மின்னு முடித்தலையார் வீடு.

குறிப்பு :-

பா - இனத்து - வண்ணம் - பயிலும்
பா இனங்களுள் வண்ணம் விளங்கும்
சித்திரத்தும் – வண்ணம் - பயிலும்
சித்திரத்தில் நிறம் விளங்கும்
மின்னும் - முடித்தலையார்
பிரகாசிக்கின்ற முடிதாங்கிய தலையையுடையார்
வேத முடித்தலையார்-
வேதமுடிவின் தலையா யுள்ளவர்
மின்னும் – முடித்து - அலையார்
பெண்ணை முடித்தும் அலைவுறுதவர்.

26.

பன்னரிய மாமடத்தும் பங்கயமா ருந்தடத்தும்
அன்னம் பயிலு மணிவண்ணே — துன்னுபவத்
தஞ்சு தரத்தார்க் கருளமுதம் பாலிக்கும்
அஞ்சு தரத்தா ரகம்.

குறிப்பு :

பன்னரிய - மாமடத்தும் - அன்னம் - பயிலும்
பெரிய மடங்களில சோறு மிக்கிருக்கும்.

தடத்து - அன்னம் - பயிலும்
தடாகத்தில் அன்னங்கள் உலாவும்.

அஞ்சு - தரத்தார்க்கு
அஞ்சப்படும் தன்மை யாளர்க்கு

அஞ்சு - தரத்தார்
அஞ்சு சிரங்களையுடையார்.

27.

சிலமல்லர் திண்புயங்கள் செல்வருறை வாயில்கள்
வாலிபத்தைக் காட்டுமெழில் வண்ணையே — ஆலத்துக்
கோடுதலைக் கொண்டார்க் குணரவுறர் பிச்சைக்கா
யோடுதலைக் கொண்டார்வா ழூர்.

குறிப்பு :

திண் — புயங்கள் - வாலிபத்தைக் - காட்டும்
திண்ணிய புயங்கள் இளமையைக் காட்டும்.

வாயில்கள் - வால் - இபத்தைக் - காட்டும்
வாயில்கள் வால்தங்கிய யானையைக் காட்டும்.

ஓடுதலைக் - கொண்டார் -
ஓடிப்போதலைக் கொண்டவர்.

ஓடு - தலைக் கொண்டார் -
தலையோட்டைக் கொண்டவர்.

28.

முன்னரிய யாழிடத்தும் மொய்த்தவரி வில்லிடத்தும்
மன்னரம்பு பூட்டுமெழில் வண்ணையே — பன்னரிய.
மானத்தங் கொண்டார் மலையரசன் பாலுதித்த
மானத்தங் கொண்டார் மனை.

குறிப்பு:-

யாழிடத்து - மன் — நரம்பு — பூட்டும்
யாழிடத்து மன்னும்படி நரம்பைப் பூட்டுவார்கள்,
வில்லிடத்து - மன்னர் - அம்பு -பூட்டும்
வில்லிடத்து அரசர் பாணங்களைத் தொடுப்பர்.
மான் - அத்தங்கொண்டார்
மானைத் திருக்கரத்தில் தாங்கினவர்
மான் — அத்தம் — கொண்டார்
பெண்ணை பாதிவடிவிற் கொண்டவர்

29.

மல்லிகைசேர் முல்லையிலும் மாமன்ன ரெல்லையிலும்
வல்லியங்க ளார்க்குமெழில் வண்ணையே – வெல்லரிய
மாலையணி கொண்டார் மனத்துடையார் செங்கழுநீர்
மாலையணி கொண்டார் மனை

குறிப்பு:-

மல்லிகை - சேர் — முல்லையில்
மல்லிகைச் செடிசேர்ந்த முல்லை நிலத்தில்
வல்லியங்கள் - ஆர்க்கும்
புலிகள் ஆர்ப்பரிக்கும்
மன்னர் - எல்லையிலும்
அரசர் வாழ் எல்லையிலும்
வல் - இயங்கள் - ஆர்க்கும்
வலிய வாத்தியங்கள் ஆர்ப்பரிக்கும்
மாலை யணிகொண்டார்
மயக்கத்தைப் பொருந்திக் கொண்டவர்கள்
செங்கழுநீர் - மாலை - அணிகொண்டார்
செங்கழுநீர் மாலையை அணியாகக் கொண்டவர்.

30.

அண்டத் துறுபணியும் அன்பர் செயும்பணியும்
மண்டலங்கொண் டாடவளர் வண்ணையே - விண்டரிய
மாநாகம் பூண்டார் வளர்புவியெ லாமீன்ற
மாஞகம் பூண்டார் மனை.

குறிப்பு:-

அண்டத்து - உறு - பணி
முட்டையிற் ருேன்றும் பாம்பு
மண்டலம் - கொண்டு - ஆடவளர்
மண்டலமிட்டு ஆடும்படி வளருகின்ற
அன்பர் - செயும் - பணி
அடியார்கள் செய்யும் தொண்டு
மண் - தலம் - கொண்டாட
இந்நிலவுலகம் பாராட்டும்படி
மா - நாகம் - பூண்டார்
பெரிய பாம்பைத் தரித்தவர்
மான் - ஆகம் - பூண்டார்
பெண்ணைத் திருமேனியில் பூண்டுகொண்டவர்.

31.

சிந்தைநிறை பூசையிலும் செங்கமலப் பூவினிலும்
வந்தனங்க ளேறுமெழில் வண்ணையே - முந்தமன
மாசினத்தார்க் கொன்ரு் மருவுமெயில் மூன்ருரை
மாசினத்தாற் கொன்ருர் மனை

குறிப்பு :-

பூசையில் - வந்தனங்கள் - ஏறும்
பூசையில் வழிபாடுகள் ஏறும்
செங்கமலப் - பூவில் - வந்து - அனங்கள்- ஏறும்
செந்தாமரைப் பூவில் அன்னங்கள் வந்து ஏறும்
மனமாசு - இனத்தார்க்கு -
மன அழுக்குள்ள கூட்டத்தாருக்கு
ஒன்ருர் பொருந்தாதவர்
மா - சினத்தாற் - கொன்ருர்
பெரிய கோபத்தாற் கொன்றவர்.

32.

ஓதுபுவி கண்டோரும் ஒப்பில்பெண் கொண்டோரும்
மாதம் பரநாடும் வண்ணையே நாதமலி
வானத் தலைத்தலையார் வஞ்சமறுத் தார்தலையார்
வானத் தலைத்தலையார் வாழ்வு

குறிப்பு:-

புவி - கண்டோர் - மாதம் - பரம் - நாடும்
பூமியின் நிலைமையைக் கண்டவர்கள்
மாதம் தோறும் கடவுளைத் தேடுவார்.
ஒப்பில் பெண் - கொண்டோரும்
சமானமற்ற பெண்ணைக் கொண்டவர்களும்
மாது - அம்பரம் - நாடும்
அம்மாதுக்குப் பீதாம்பரங்களைத் தேடுவார்கள்
வானத்து - அலை - தலையார்
தேவகங்கையைச் சிரத்திற் கொண்டவர்
வஞ்சம் - அறுத்தார் - தலையார்
வஞ்சமில்லாரிடத்துள்ளார்
வானத்தலை - தலையார்
தேவருலகுக்கு முதலாயுள்ளவர்.

33.

தாவில் நிறைகுடத்தும் தக்க பொருளிடத்தும்
மாவிலைமே லேறுமெழில் வண்ணையே ஆவலுறு
தாளத் தனத்தர் தனத்தினிணம் காட்டுகின்ற
தாளத் தனத்தர் தலம்

குறிப்பு:-

நிறைகுடத்து - மா இலை - மேல் - ஏறும்
நிறை குடங்களில் மாமரத்தின் இலைகள்மேலே தங்கும்
பொருளிடத்து - மா - விலை - மேல் - ஏறும்
பொருள்களிடத்து அதிகவிலை அகதிகரிக்கும்
தாளத் தனத்தர் - தனத்து
தாளம் போன்ற தனங்களையுடையார்களின் தனங்களின்
தாளத்தன் - அத்தர்
சமுத்திர வாசராகிய திருமாலுக்கு அத்தராயுள்ளவர்.

34.

பூவிலங்கு காவகமும் பொற்பார் கணிகையரும்
மாவிலங்கை காட்டுமெழில் வண்ணையே — பூவிலங்கு
வேதனரி கண்டறியார் மேய விலைப்பரியா
வேதநரி கண்டறிவார் வீடு

குறிப்பு :-

காவகம் - மாவிலங்கை - காட்டும்
சோலைகள் மாவிலங்கை மரத்தைகாட்டும்
கணிகையர் — மா - இல் - அம் — கை - காட்டும்
தாசிகள் இலக்குமி வசிக்கும் தாமரை மலர்போன்ற அழகிய கையைக் காட்டுவார்கள்
பூவிலங்கு - வேதன் - அரி - கண்டறியார்
தாமரை மலரிலுறையும் - பிரமா -விஷ்ணுவினல் காணப்பெருதவர்
விலைப்பரியா - வேதம் - நரி -கண்டு
விலையிற் சிறந்த குதிரைகளாக வேதத்தையும் நரியையுமாக்கி

35.

அடர்த்திகொண்ட நீடெருவு மாதரநல் லாரும்
மடத்தினழ கோங்க வளர்வண்ணை படத்திலுயர்
நாகங்கொண் டார்பெருமை நண்ணு மரியவெள்ளி
நாகங்கொண் டார்சேர் நகர்

குறிப்பு :-

நீள் - தெரு - மடத்தின் அழகு - ஓங்க
நீண்டதெருக்கள் மடங்களின் அழகு மிக
நல்லார் - மடத்தின் - அழகு ஓங்க
பெண்கள் இளமையின் அழகு பொருந்த
நாகம் — கொண்டார்
பாம்பை ஆபரணமாகக் கொண்டார்
வெள்ளி - நாகம் - கொண்டார்
வெள்ளி மலையை இருப்பிடமாகக் கொண்டவர்

36.

வேளனைய வீரர்களும் வித்தகமார் பண்டிதரும்
வாளங்கை யாளுமெழில் வண்ணையே — நாளுந்தான்
நங்கைதலைக் கொண்டால் நயந்தருளைப் பாலிக்கும்
நங்கைதலைக் கொண்டான் நகர்

குறிப்பு :-

வீரர்கள் - வாள் - அம் - கை - ஆளு
வீரர்கள் வாட்படையை அழகிய கையில் ஆட்சிப்படுத்துவர்

பண்டிதர் - வாளம் - கையாளும்
வைத்தியர் நேர்வாளத்தை எடுத்தாளுவர்.

நம் - கை - தலைக்கொண்டால்
நமது கையைத் தலையில் வைத்துக் கும்பிட்டால்

நங்கை - தலைக்கொண்டான்
பெண்ணைத் தலையிலே கொண்டவர்

37.

தாதுறுநந் தாவனமுந் தக்கதும்பி அங்குகையும்
மாதுளையைக் காட்டுமெழில் வண்ணையே — கோதுவளர்
ஆசையுடையா ரடையாப் பெருமையினர்
ஆசை யுடையா ரகம்

குறிப்பு :-

நந்தாவனம் - மாதுளையை
பூந்தோட்டம் மாதுளைச்செடியை

தும்பி - தூங்கு - கையும் - மா - துளையைக் காட்டும்
தூங்கு தும்பிக்கை பெரிய துளையைக் காட்டும்

ஆசையுடையார் - அவாவுடையவர்கள்
ஆசையுடையார்திக்கை உடையாகக் கொண்டவர்

38.

மோகச்செந் தாமரையும் மொய்குறிஞ் சித்தரையும்
மாகமலை காட்டுமெழில் வண்ணையே — நாகமே
நாணகக் கொண்டார் நவில்முனிவர் பன்னியர்பால்
நாணகக் கொண்டார் நகர்

குறிப்பு :-

செந்தாமரை - மா - கமலை - காட்டும்
செந்தாமரைப்பூ பெருமையார்ந்த இலக்குமியைக் காட்டும்

குறிஞ்சித்தரை - மாக - மலை - காட்டும்
குறிஞ்சி நிலம் ஆகாயத்தை அளாவிய மலையைக் காட்டும்

நாணகக் கொண்டார்
நாணியாகக் கொண்டவர்

நாண் - ஆக - கொண்டார்
வெட்கமுண்டாகும்படி திருவுருக் கொண்டவர்.

39.

பானலார் கண்ணூரும் பாத்தேர் புலவோரும்
பானலங்கொண் டாடும் பணிவண்ணை — யேனற்
புனத்தணிவான் கொண்டாட் புணர்வேலை யீன்ற
புனத்தணிவான் கொண்டான் புகல்

குறிப்பு :-

கண்ணூர் - பால் - நலம் - கொண்டாடும்
பெண்கள் பாலின் நலத்தைக் கொண்டாடுவர்

புலவோரும் — பா — நலம் - கொண்டாடும்
புலவர்கள் பாட்டின் நலத்தைக் கொண்டாடுவர்

புனத்து — அண்ணி - வான் - கொண்டாள்
புனத்தை யடைந்து சேணிருப்பதை கொண்டவள்
சேண் - பரண் என்பது கருத்து

புல் - நத்து — அணிவான்
புல்லிய சங்கை குண்டலமாக அணிபவர்
( நத்து - புல் - அணிவான் ). புல் - புல்லிய

40

காான்மீது பாய்நீருங் காரேறு மாமுகிலும்
வான்மீனைக் காட்டுமெழில் வண்ணையே — ஆன்மீதில்
ஏறுமருளாளர் எவரையுங்காப் பாற்றுதற்காய்
ஏறுமரு ளாள ரிடம்

குறிப்பு :-

நீர் - வான் - மீனை
நீர் பெரிய மீனை
மாமுகில் — வான் - மீனை
பெரிய முகில்கள் நட்சத்திரங்களை
ஏறும் - மருளார்ளர்
மயக்கமேறப் பெற்றவர்கள்
ஆன் — மீதில் — ஏறும் - அருளாளர்
இடபத்தின் மேலேறும் அருளாளர்

41.

கொண்டலள கத்தினரும் கோவரியும் பூமேவு
வண்டலையே மேவுமெழில் வண்ணையே - தண்டலையார்
பூவை முடியார் புகழ்முடியார் கைதைதரு
பூவை முடியார் புரி

குறிப்பு :-

அழகத்தினர் வண்டலையே நாடும்
கூந்தலையுடையார் வண்டல் விளையாட்டையே நாடுவர்
கோவரியும் - பூ — மேவு வண் தலையே நாடும்
அரச வண்டுகள் பூத்தங்கிய வளவிய தலையை நாடும்
பூவை - முடியார் - பூக்களை முடியிலுள்ளவர்கள்
புகழ் - முடியார் - கீர்த்தியின் தலையிலுள்ளவர்கள்
கைதை தரு பூவை முடியார்
தாழம்பூவை முடியாதவர்

உ

குரு. சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் அவர்கள்

இயற்றிய

# முன்னைநாத சுவாமி நவதுதி

## விநாயகர் துதி

### வெண்பா

நல்லது விநாயகனே நாடுமுன்னை நாதனருள்
வல்ல கணபதியே மாநிதியே சொல்லரிய
அட்டசித்தி யீந்தருளு மண்ணலே நாயேனுக்
கிட்டசித்தி யீந்தருள்வா யே!

(1) உலகுயி ருய்ய வுலகருள் கடவு
ளுவப்பொடு முன்னைநா ளுருகி
அலகிலன் பார நிறுவிமுற் பூசை
யாற்றிட வமர்ந்த மாமணியே
திலகவா ணுதலார் தேவியோர் பங்கிற்
சேர்ந்திட விளங்குபொன் மணியே
இலகுமெய் யடியார்க் கருள்செய வளரு
மிசைநிறை மாணிக்க மணியே.

(2) அடியனேன் றனக்கு னடிமல ரிணையை
யனுதின மகமிக மகிழத்
துடியன விடையார் அம்பிகை மருவச்
சுந்தர விடைமிசை யேறிப்
படியுள தீய வினையெலா மகலப்
பரவுமோ ரன்புறக் காட்டி
மடியுளேன் றன்னை யாண்டருள் கருணை
வள்ளலே முன்னை யகனே.

(3) வேண்டுவார்க் கிட்ட சித்திக ளருளும்
விண்ணவர் பணியுமெய்ப் பொருளே
யீண்டுபோர் புரியு மிராவணன் றனைவீட்
டிராமமூர்த் தியைமுனந் தொடர்ந்து
தீண்டுசீர்ப் பிரம கத்தியை விலக்கித்
தேங்குபே ரருண்மழை பொழிந்து
தூண்டுபே ரொளியாய் விளங்குமா ரமுதே
சுகநிலை காட்டியாண் டருளே.

(4) தேவியோர் பங்கிற் செறிந்திட விளங்குந்
தெய்வமே யென்னுளத் துறையு
மாவியே யமுதே யானந்த நிதியே
யனைத்துயிர் புரந்தரு ளரசே
பாவியேன் படும்பா டதனையிங் கெடுத்துப்
பகர்ந்திட வளவினிற் படுமோ
கூவியே யுனது குரைகழல் பணிந்தேன்
குறைபொறுத் தாளவந் தருளே.

(5) விண்டுவின் பெருமை பெரிதென வெடுத்து
வியந்துகை தலைமிசை தூக்கி
யுண்டுகொல் பிறிதென் றுரைத்திடு வியாத
னுயர்த்திய கையினைப் பெரிய
தண்டுநின் றதுபோ லாக்கிப்பி னுண்ட
தற்பர ஞானசிற் பரனே
கண்டுநின் பாத தொண்டுபூண் டுய்யக்
கருணைவைத் தாண்டரு ளரசே.

(6) நாயினுங் கடையே னயினு முன்னை
நாதனே யுலகநா யகனே
தாயினு மினிய கருணைவைத் தாளுந்
தற்பரா னந்தவா ரிதியே
வாயினும் மனத்து மிடைவிடா திருக்கும்
வகையினை யருள்புரிந் தெப்போ
தாயினு மறவா வாழ்வுதந் தாள
வந்தருள் மால்விடை யெழுந்தே.

(7) உன்னடி பணியும் நாயினேன் படும்பா
டுனதுள மறிந்திடு மல்லாற்
பின்னையா ரறிவார் பேசுதற் குரிமை
பெற்றுளார் பிறிதுயர் ருள்ளார்
அன்னையே யனையா யென்னைநீ கைவிட்
டவமதித் திருந்திடி லடியேன்
றன்னையார் காப்பார் தமியனேன் செய்யத்
தக்கது மேதுமிங் குளதோ.

(8) பொன்னையு மதியேன் பூவையரின்பப்
புணர்ப்பையும் மனத்திடை நினையேன்
பின்னையிங் கெவர்தம் புகழையுந் துதியேன்
பேணிமற் றென்றையும் விதியேன்
உன்னையே மதிப்பே னுன்புகழ் துதிப்பே
னுன்புணர்ப் பேமனம் பதிப்பேன்
என்னைநீ கைவிட் டிடிலுயிர்த் துணையா
யிருப்பவர் பிறிதிலை யரசே.

(9) இந்நிலத் துன்றன் பெரும்புகழ் பாடி
யிராப்பகல் துதித்திடு மடியேன்
உன்னிலை யறியாப் பாவியா யுள்ளத்
துன்னடி பெற்றிடா துறைந்தால்
எந்நிலத் தவரும் என்னதான் சொல்லா
ரெவர்க்குநா னிக்குறை யுரைப்பேன்
முன்னிலை வருவா யடியனேற் கிரங்கி
முன்னைநா தப்பரம் பொருளே.

---

★ சாகித்திய மண்டலம் வெளியிடு செய்த
"ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்ற
நூலில் இருந்து பெறப்பட்டவை.

மேக்கூரி, யாழ்ப்பாணம்.